56

# புறநானூற்றில் இசைக்கலை

**முனைவர் கு.சக்திவேல்**

**ஜெயலட்சுமி நாராயணசாமி கல்வியியல் கல்லூரி**

**தரமணி, பள்ளிப்பட்டு சென்னை-600113.**

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க காலம் என்பது மக்கள் அனைவரும் தங்களது வாழ்வினை வளமுடன் வைத்திருந்தனர் என்பதற்கு சங்ககாலம் ஓர் பொற்காலம் என்ற கருத்தின் வழியே அறியமுடிகின்றது. மக்கள் அனைவரும் கல்விஇ கேள்விகளில் சிறந்திருந்தனர். கலைகளுக்கு சங்ககால உயிர்நாடியாக திகழ்ந்த காலம் சங்க காலம் என்றால் அவை குறைவுபடாது. இசையில் முதல் இசையாக தரம் அமைகின்றது. அத்தகைய கலைகளுள் இசைக்கலைத்தனித்துவம் வகிக்கின்றது. சங்க கால இசையில் முதல் இசையாக தாரம் அமைகின்றது. அதாவது முதல் ஏழிசையாக தாரம்இ குரல்இ துத்தம்இ உழைஇ இளிஇ கைக்கிளைஇ விளர் என்ற வடிவம் கொண்டு புலவர்கள் அமைத்துள்ளனர்.

இசைக்கலையினை பாணர்கள்இ பாடினியர்இ விறலியர்இ பறையர்இ கூத்தர் போன்ற கலைஞர்கள் பேணி பாதுகாத்து வந்தள்ளனர் என்பதை புலவர்களது பாடல் வரிகளின் வழியே அறிமுடிகின்றது. புறநானூற்றில் இசைக்கலையானத் தோற்கருவிஇ துளைக்கருவிஇ நரம்புக்கருவிஇ கஞ்சக்கருவி போன்ற இசைக்கருவிகளின் வழியாக இசைக்கலையானது நல்ல வளர்ச்சி நிலைப்பெற்றுள்ளது. எனவே சங்க காலத்தில் மக்களது பயன்பாட்டில் இருந்த இசையினைப் பற்றி தொடர்ந்து இந்த கட்டுரை வழியே எடுத்தியம்பப்பட உள்ளது.

மனிதன் சாதிஇ மதம்இ மொழி, நிறம் ஆகிய உள்ளுணர்வுகளால் வேறுபட்டிருக்கிறான். ஆனால் இசை அனைத்து மக்களுக்கும் எந்தவொரு பாகுபாட்டிற்கும் உட்பட்டதல்ல. பழந்தமிழர் வாழ்வில் வெற்றி செவ்வழி இசை காலந்தொட்டு பயன்பாட்டில் இருந்து வருவதை இக்கட்டுரை விளக்குகிறது.

**முன்னுரை**

பழந்தமிழில் உள்ள தொகை நூல்களில் ஈடு இணையற்ற நூல் புறநானூறு ஆகும். இந்நூல் பண்டைத் தமிழ் மக்களின் ஒழுகலாறுகளையும் பழக்க வழக்கங்களையும், பண்பாட்டுச் சிறப்புகளையும், நாகரிக மேம்பாட்டையும், தொழில்முறைகளையும், மக்களின் வாழ்க்கை நிலைகளையும் அறிய உதவும் அரிய களஞ்சியமாக விளங்குகிறது.

இசை என்ற சொல்லுக்கு இசையவைப்பது என்பது பொருள். மனிதனையும் மற்ற உயிரினங்களையும் என் இறைவனையும் இசையவைக்கின்ற ஓர் ஒப்பில்லாத சாதனம் இசையாகும். "ஆங்கிலத்தில் இசையை ஆருளுஐஊ என்று அழைப்பர். ஆருளுஐஊ என்ற சொல் ஆழுருளுயு என்ற கிரேக்க சொல்லில் இருந்து வந்துள்ளது. ஆருளுநுளு என்ற கிரேக்க தேவதைகள் விரும்பிய, ஊக்குவித்த ஒரு கலை பின்பு ஆருளுஐஊ என்று அழைக்கப்பட்டது.

இசை என்பது கட்டுப்பாடுள்ள இனிமையான ஒலியாகும். கட்டுப்பாடில்லாத இனிமையைத்தராத ஒலியை இரைச்சல் என்று அழைக்கலாம். மனிதன் பிறப்பிலிருந்து இறக்கும் வரை இசையோடு தொடர்புடையனாகத் திகழ்கின்றான். அழும் குழந்தை தாலாட்டுப் பாட்டைக் கேட்டவுடன் அழுகையை நிறுத்திவிட்டு தூங்க ஆரம்பிக்கின்றன. உச்சி வெயிலில் கடுமையாக வேலை செய்யும் உழைப்பாளிகள்



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

தங்கள் களைப்பை தீர்க்க பாடிக்கொண்டே வேலை செய்கின்றனர். இறைவனை வழிபட பக்திப்பாடல்கள் மக்கள் மனதை ஈர்த்து இறைவன் பக்கம் திரும்புகின்றன. இறக்கும் பொழுது இறந்தவரின் உடலினைச் சுற்றி அமர்ந்து ஒருவகையான பாடலைப் (ஒப்பாரி) பாடுகின்றனர் இவ்வாறாக மனித வாழ்வின் ஒவ்வொரு படியிலும் இசைக்கலைத் தனி இடம் வகுக்கின்றனது.

இசைக்கலை மனிதனிடமிருந்து தோற்றம் பெற்றதா அல்லது கடவுளால் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட வரமா என்பதனைக் கூட ஆய்வாக எடுத்துக்கொண்டால் அவை ஓர் மிகப்பெரிய பலனை அளிக்கும். இசை உருவாவதற்கு இயற்கையோடு ஒன்றித்திருந்த பறவைகளும், விலங்கினங்களும், அருவிகளுமே இசைக்கலை உருவாவதற்கு ஓர் காரணமாக அமைந்திருக்கலாம். ஆனால் மொழியியல் வல்லலுனர்களின் கருத்துப்படி இசைக்கலை தொல்பழங்கால மனிதனுடைய பேச்சு மொழியே இசைக்கலையின் அரும்பு என்று கூறுகின்றனர்.

இசை என்பது அனைவராலும் அறியத்தக்க மொழி ஆகும். ஐம்புலன்களில்இ காதுகளால் கேட்டு இன்புறத்தக்க ஓர் அரிய கலை இசைக்கலை ஆகும். இசை என்பது இசைவிப்பது; தன்வயப்படுத்துவது என்பது பொருள்படும். அன்பைப் பெருக்கி ஆருயிரையும் வளர்ப்பது இசையாகும். மரம், செடி, கொடி முதலிய ஓரறிவு உயிர்கள் முதலாக மக்கள் என்னும் ஆறறிவு உயிர்கள் வரையுமுள்ள எல்லா உயிர்களையும் இசையினால் வசப்படுத்த முடியும் என்பதை மெய்ப்பித்துள்ளனர்.

தொல்காப்பியத்தில் ஐவகை நிலத்திற்கும் உரிய பண்களை வரையறை செய்வதில் இருந்து தமிழிசையின் தொன்மை புலப்படுகின்றது. பண்களைப் பற்றியும் இசைக்கருவிகளைப் பற்றியும் பல செய்திகள் புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது.

சங்க காலம் என்பது மக்கள் அனைவரும் தங்களது வாழ்வினை வளமுடன் வைத்திருந்தனர் என்பதற்கு சங்ககாலம் ஓர் பொற்காலம் என்ற கருத்தின் வழியே அறியமுடிகின்றது. மக்கள் அனைவரும் கல்வி, கேள்விகளில் சிறந்திருந்தனர். கலைகளுக்கு சங்ககால உயிர்நாடியாக திகழ்ந்த காலம் சங்க காலம் என்றால் அவை குறைவுபடாது. இசையில் முதல் இசையாக தரம் அமைகின்றது. அத்தகைய கலைகளுள் இசைக்கலைத்தனித்துவம் வகிக்கின்றது. சங்க கால இசையில் முதல் இசையாக தரம் அமைகின்றது. அதாவது முதல் ஏழிசையாக தாரம், குரல், துத்தம், உழை, இளி கைக்கிளை, விளர் என்ற வடிவம் கொண்டு புலவர்கள் அமைத்துள்ளனர்.

இசைக்கலையினை பாணர்கள், பாடினியர், விறலியர், பறையர், கூத்தர் போன்ற கலைஞர்கள் பேணி பாதுகாத்து வந்தள்ளனர் என்பதை புலவர்களது பாடல் வரிகளின் வழியே அறிமுடிகின்றது. புறநானூற்றில் இசைக்கலையானத் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி போன்ற இசைக்கருவிகளின் வழியாக இசைக்கலையானது நல்ல வளர்ச்சி நிலைப்பெற்றுள்ளது. எனவே சங்க காலத்தில் மக்களது பயன்பாட்டில் இருந்த இசையினைப் பற்றி தொடர்ந்து இந்த கட்டுரை வழியே எடுத்தியம்பப்பட உள்ளது.

பாணர் குடி அக்காலக் குடிகளில் சிறப்புடைய ஒன்றாகக் கருதப்பட்டிருக்கின்றது. இதனை,

“துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று
இந்நான்கு அல்லது குடியும் இல்லை” (புறம் 335 – 7-8)

என்ற பாடல் வரிகளின் மூலம் துடி கொட்டுபவன் குடி துடியன். யாழிசைக்கும் பாணர்குடி, பறையடிக்கும் பறையன்குடி, கடம்பனுடைய குடி ஆகிய நான்கு குடிகளைத் தவிர வேறு எந்த குடிகளும் இசைத்துறையில் இடம்பெறவில்லை என்பதை அறிய முடிகிறது.


Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

“பண்டைக் காலத்தில் இசைக் கலையில் வல்லவராயிருந்தவர் பாணர் என்னும் இனத்தவராவர். எனவே சங்க காலத்திலே பாணர்கள் அரசர், சிற்றரசர், செல்வர் முதலியவர் வீடுகளுக்குச் சென்று இசைப் பாடல்கள் பாடினர். பாணர்களின் திறமையை அறிந்து பொன்னையும், பொருளையும் வாரி வழங்கினார்கள்”. எனவே பண்டைய காலத்தில் பாணர்கள் உயர்வாக இருந்துள்ளனர் என்று தமிழ்வளர்த்த அழகுக் கலைகள் என்னும் நூலில் மயிலை சீனி. வேங்கடசாமி குறிப்பிட்டுள்ளார்.

பாணர்கள் பரிசுப்பெற வரும்பொழுது மன்னனைப் புகழ்ந்து பாடுவது வழக்கம். அவ்விதமாக சேரமான் பாலைப்பாடிய பெருங்கடுங்கோவைப் புகழ்ந்துப் பாடுகையில் அவைக்களத்தில் தாளத்தினை நன்முறையில் வகுத்து, முதல் தாளத்தினை வரையறுத்து தொடக்க தாளமான ஆதிதாளத்தில் இருந்து இசையினை குரல் வழியாக எழுப்பி புகழ்ந்துப்பாடினர் என்பதை இப்பாடல் வரியின் வழியே அறியமுடிகின்றது.

“குரல்புணர்சீர்க் கொளைவல்பாண் மகனும்மே" (புறம்.11:15 )

பழந்தமிழர்களில் கடலை நம்பி வாழ்ந்த மீனவர்கள் இருந்தனர் என்ற குறிப்பினை புறநானூறு பாடல்களின் வழியே அறியமுடிகின்றது. மீனவர்கள் தங்களது உடல் சோர்வினை மது உண்டு குரவர்களின் தாளத்திற்கு ஏற்ப நடனமாடி மகிழ்ந்தனர் என்ற நிகழ்வின் வழியாகப் பண்டைய தமிழர்கள் தாளங்களை முதன்மையாகக்கொண்டு இசையினை பன்படுத்தியுள்ளனர் என்பதை இப்புறநானூறு பாடல் வரியின் வழியேயும் அறியமுடிகின்றது.

“தன்குரவைச் சீர் தூங்குந்து" (புறம். 24:16)

தோற்கருவி

பண்டையத் தமிழ் இலக்கியங்களில் தோற்கருவிகள் பல ஏற்படுகின்றன. அவை பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறை முதலிய இசைக்கருவிகள் பற்றி சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், நீதி நூல்கள் போன்ற இலக்கியங்கள் பேசியுள்ளன. ஆனால் நமது ஆய்வு தலைப்பிற்கு ஏற்ப புறநானூறு இலக்கியம் பேசியுள்ள கருவிகளைத் தொடர்ந்து காண்போம்.

முரசு

முரசு என்பது பறையைப் போன்றதோர் மிகப்பெரிய வடிவம். இந்த இசைக்கருவி வெற்றியின் பிரதிபலிப்பினைத் தெரிவிப்பதாகவும், போரின் துவக்கத்தினை அறிவிப்பதாகவும் பயன்படுத்தப்பட்டன என்பதை இலக்கியங்கள் வழியே அறியமுடிகின்றது.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை கல்லாடனார் என்னும் புலவர் புகழ்ந்துப் பாடுகையில் முரசு பற்றிய குறிப்பினை இங்ஙனம் அறியமுடிகின்றது. பண்டையத்தமிழர் அரசர்களது வெற்றியினை அந்நாட்டின் போர் முரசு கொண்டே வகைப்படுத்தினர் என்பதை புறநானூறு தெளிவாக எடுத்துக்கூறுகின்றது. முரசு என்பது பறையைப் போன்றதொரு மிகப்பெரிய வடிவம். இக்கருவி போரின் துவக்கத்திலும், போரில் வெற்றிப்பெற்ற பிறகும் வாசித்து தங்களது போர் வலிமையை மன்னர்கள் தெரிவித்துக் கொண்டனர் என்பதை இப்பாடல் வரியின் வழியே அறியமுடிகின்றது.

“அணங்களும் பறந்தலை உணங்கப் பண்ணி
பிணியுறு முரசம் கொண்ட காலை” (புறம்.25:7)

சோழன் நலங்கிள்ளியின் சிறப்பினை முதுகண்ணன் சாத்தனார் புகழ்ந்துப் பாடுகையில் மன்னனது கோயில்களின் இனிமையான முரசானது முழங்கிக் கொண்டிருந்தது என்பதை இப்பாடல் வரியின் வழியே அறியமுடிகின்றது. போரில் எழுச்சி தருவதற்கேற்பத் தோல் கருவிகளே முழக்கப்பட்டுள்ளன. போர் முரசு செய்தவற்குரிய தோலின் இசை நுணுக்கச் செய்தியைவிட போர் முரசு செய்வதற்கேற்ற தோலின் மறப்பின் புலமே முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. மண்ணைக் கீறிய மிகக் கூரிய கொம்பினையிடைய பெருமை பொருந்திய நல்ல ஆனேறு இரண்டினைத் தம்முட்போர் செய்யவிடுத்து வெற்றி பெற்ற ஏற்றினுடைய தோலை மயிர் சீவாது போர்த்துத் திண்ணியதாய்க் கட்டி முரசு செய்யப்பட்டது என்பதை,

“மண் கொள வரித்த வைந்நுதி மருப்பின்
அண்ணல் நல் ஏறு இரண்டு உடன் மருந்து
வென்றதன் பச்சை சீவாது போர்த்த
திண் பிணி முரசம் இடைப்புலத்து இரங்க”   (புறம் 288: 1-4)

என்ற பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகின்றது.

தண்ணுமை

தண்ணுமைக்கு ‘மத்தளம்’ அல்லது ‘மிருதங்கம்’ என்பது பெயர் உண்டு. ‘மத்து’ என்பது ஓசைப்பெயர், ‘தளம்’ என்பது இசையிடனாகிய கருவிகளுக்கெல்லாம். தாளமாக இருக்கும். அதனால் ‘மத்தளம்’ என்று பெயர் பெற்றது. இது தோல் கருவியாகும். அஞ்சாது போர்புரியும் மறப்பண்பு மிக்க வீரர்களுக்கு அரசன் சிறப்புச் செய்தலையும் போர்புரியும் பாசறையில் இன்று போருக்குரிய பூவை மறவர்க்குத் தரும் நாள் என்று அறிவிக்கும் கருவியாக மத்தளம் பயன்படுத்தப்பட்டது என்பதை

“கோட்டியோ வழி – பாண! பாசறை
பூக்கோன் இன்று என்னறு அறையும்
மடிவாயத் தண்ணுமை இழிசின் இரலே”?
(புறம் – 289. 8-9)

என்ற பாடல் வரிகளில் அறியமுடிகின்றது.

சல்லி

சல்லென்னும் ஓசையையுடையதனால் சல்லிகை என்னும் பெயர் பெற்றது. சல்லி அல்லது எல்லா என்பது தாளவிசைக் கருவியேயாகும். இந்த இசைக் கருவி பறை போன்று ஓசையைக் கொடுக்கும் என்பதை,

“எல்லரி தொடுமின் ஆருளி தொடுமின்”   (புறம் 152 – 16)

என்ற பாடல் வரிகளின் மூலம் அறியமுடிகிறது.

பறை

பறப்பற என்ற ஒலிப்பின் அடியாகப் ‘பறைகள்’ எனப்பெயர் பெற்றன. பறைகள் தோற் கருவிகளுக்குப் பொதுப்பெயராகும். முழக்கப்படுவனயாவும் முழவுகள் எனப் பொதுப் பெயர் பெற்றுள்ளன.

“அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்து உரைக்கலான்”   (குறள்-1076)

என்ற குறளில் ஐவகை நிலத்திற்கும் பறை உரியதாகக் காட்டப்பட்டுள்ளது.

போர் வீரர்கள் தம்முடைய வீரம் நிறைந்த தோளினைத் தட்டுவர். அவ்வீரர்களின் மனத்தில் இருக்கும் பழிவாங்கும் உணர்ச்சியும் மறைந்து மன அமைதி ஏற்படுமாறு பறையோசை கேட்கும் மனயோசை போரின் முடிவில் அடிக்கப்படும் ஒரு வகை இசையாகும் இதனை,

"நீங்கா மறவார் வீங்கு தொன்புடைப்ப
தனிபறை அறையும் அணிகொள் தேர்வழி"
(புறம் 68: 13-14)

என்ற பாடல் வரிகளில் பறையோசைப்பற்றி அறிய முடிகின்றது.

சிறுபறை

பாணர்களது இல்லத்தலைவிகளாக விளங்குபவர்கள் விறலியர்கள், நல்ல யாழ் என்ற இசைக்கருவியையும், சிறுபறையினையும் முழவு என்ற இசைக்கருவியினையும் போரின் காரணமாக இடம்பெயர்த்தனர் என்று நெடும்பல்லியாதனார் தமது பாடல் வரியின் வழியாக பாணர்கள் யாழ், பறை, முழவு போன்ற கருவிகளை இசைப்பதில் தேர்ச்சி மிக்கவர்கள் என்பதை இப்பாடல் வரியின் வழியேயும் அறியமுடிகின்றது.

"நல்யாழ் ஆகுளி பதலையொடு சுருக்கிச்
செல்லா மோதில் சில்வளை விறவி"
(புறம். 64:1-2)

இசைக்கலைஞர்கள் தங்களது வறுமையின் காரணத்தினால் நாடு நாடாகச் சென்று பாடிப்பரிசுப் பெரும் சூழலில் ஒரு சமயம் கலைஞர்கள் ஒரு காட்டின் வழியேச் செல்லும் பொழுது ஒரு வீரனது வில் திறமையினைக் கண்டு விரலி தனது கலைஞர்களிடம் நான் வீரனைப் பாடத்தொடங்குகிறான். நீங்கள் சிறுபறையினைக் கொண்டு இசை அமையுங்கள் என்பதை வன்பரணர் இப்பாடல் வரியின் வழியை எடுத்துரைக்கின்றார்.

"எல்லரி தொடுமி னாகுளி தொடுமின்" (புறம். 152-16)

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் கல்லாடனார் புகழ்ந்துப்பாடுகையில் இசைக்கலைஞர்கள் இவனது வாயிலின் முன்னதாக சிறுபறையினை வாசித்துக்கொண்டு பரிசுப்பெற வந்தனர் என்பதை இப்பாடல் வரியின் வழியேயும் அறியமுடிகின்றனது.

இல்லத்தலைவிகளாக விளங்குபவர்கள் விறலியர்கள் நல்ல யாழ் என்ற இசைக்கருவியையும், சிறுபறையினையும் முழவு என்ற இசைக்கருவியினையும் போரின் காரணமாக இடம்பெயர்த்தனர் என்று நெடும்பல்லியாதனார் தமது பாடல் வரியின் வழியாக பாணர்கள் யாழ்இ பறை, முழவு போன்ற கருவிகளை இசைப்பதில் தேர்ச்சி மிக்கவர்கள் என்பதை இப்பாடல் வரியின் வழியேயும் அறியமுடிகின்றது.

"நல்யாழ் ஆகுளி பதலையொடு சுருக்கிச்
செல்லா மோதில் சில்வளை விறலி" (புறம். 64:1-2)

**நரம்புக்கருவிகளின் வழி இசைக்கலை**

மரத்தினால் செய்யப்பட்டு நரம்புகள் அல்லது கம்பிகள் பூட்டப்பட்டவை நரம்புக்கருவிகள் ஆகும். அவை யாழ், வீணை, தம்புரா, கொட்டுவாத்தியம் பிடில் முதலியனவாகும். புறநானூற்று இலக்கியத்தில் யாழ் என்னும் இசைக்கருவிகள் வழியாகவே பெரும்பான்மையாக இசைக்கலையானது வளர்ந்துள்ளது. அதனை



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

புலவர்களது பாடல்களின் வழியே அறியமுயலுவோம். யாழ் என்பது மிகவும் பழமையான இசைக்கருவியாகும். இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த பண்டைத்தமிழர்கள் இயற்கையில் காணும் பொருள்களின் அசைவினாலும் அவை ஒன்றோடொன்று மோதிக்கொள்வதாலும் அதனால் உண்டாகும் அதிர்ச்சியினாலும் ஏற்படும் பலவித ஒலிகளை தங்களது நுண்ணிய செவியால் உணர்ந்து அனுபவித்தனர். அதன் வழியாக யாழ் என்னும் இசைக்கருவி தோன்றியிருக்க வேண்டும் என்பது இதன்வழி அறியமுடிகின்றது. யாழினில் நால்வகை யாழை பழந்தமிழர் பயன்படுத்தியுள்ளனர். பேரியாழ், சீறியாழ், சகோடயாழ், மகரயாழ் போன்றவையாகும்.

முடிவுரை

தமிழர்களது வாழ்வில் அன்று முதல் இன்று வரை பயன்பாட்டில் இருந்து வருகின்ற அனைத்து இலக்கியங்களும், இசைக்கலைக்கு முக்கியத்துவம் கொடுத்துவருகின்றன. இசைக்கலைஞர்களாக பாணர், பறையர், விறலியர் ஆகியோர் திகழ்ந்துள்ளனர். இசைக்கலைஞர்களான பாணர்கள் யாழ் இசை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர்கள். இவர்கள் தங்களது இசையினைத் தாளத்திற்கு ஏற்ப வாசித்து மக்களை மகிழ்வித்தனர். பழந்தமிழரது தொடக்ககால வாழ்விலும், கடலை நம்பி வாழ்ந்த மீனவர்கள் இருந்துள்ளனர். இவர்கள் தங்களது ஆற்றலுக்கு ஏற்ப தாளத்தினை இயற்றி இசையால் தங்கள் உடல் சோர்வினைப் போக்கியுள்ளனர் மேலும் தோற்கருவி, நரம்புக்கருவி, காற்றுக்கருவி ஆகிய இசைக்கருவிகளைக் கொண்டு இசைக்கலை பெரிதும் வளர்ந்துள்ளது. மனிதன் சாதி, மதம், மொழி, நிறம் ஆகிய உள்ளுணர்வுகளால் வேறுபட்டிருக்கிறான். ஆனால் இசை அனைத்து மக்களுக்கும் எந்தவொரு பாகுபாட்டிற்கும் உட்பட்டதல்ல. பழந்தமிழர் வாழ்வில் வெற்றி செவ்வழி இசை காலந்தொட்டு பயன்பாட்டில் இருந்து வருவதை இக்கட்டுரை விளக்குகிறது.

துணைநூற்பட்டியல்

1. இராகவன், அ., இசையும் யாழும், கலைநூற்பதிப்பு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

2. பாக்கிய மேரி. எ., காலந்தோறும் தமிழர் கலைகள், பூவேந்தர் வெளியீடு, சென்னை - 4. முதற்பதிப்பு -2005.

3. செல்லத்துரை. பி.டி., தென்னக இசையியல், வைகரைப் பதிப்பகம், திண்டுக்கல்.

4. பழனிச்சாமி.செ. புறநானூற்றில் தமிழர் பண்பாடு, வாணி பதிப்பகம், சென்னை - 402. முதற்பதிப்பு -1989.